2014 ஜூலை 15]

எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே பவுஞ்சூரில் கிளை நூலகம் அமைத்துத் தர நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த ஆண்டே பவுஞ்சூரில் கிளை நூலகம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டிருக்கின்றார். கிளை நூலகம் அமைப்பதற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் உள்ளன:*

அவை, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட பகுதியாக இருக்க வேண்டும்; கிளை நூலகம் செயல்பட வாடகை இல்லாத இலவசக் கட்டடம் கொடுக்க வேண்டும்; சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 செண்ட் காலி மனை கொடுக்க வேண்டும்; தலா ரூ.1,000/- வீதம் செலுத்தும் இரண்டு புரவலர்களைச் சேர்க்க வேண்டும். ரூ.30/- வீதம் செலுத்தும் 200 நபர்களை நூலக உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். இவற்றையெல்லாம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், ஊராட்சி மன்றத் தலைவர் ஆகியோருடன் இணைந்து வேகமாகச் செய்து கொடுக்கும்பட்சத்தில், பவுஞ்சூரில் விரைவில் கிளை நூலகம் அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்

***35986—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஜூலை 15

(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், கொட்டாற்றில் தோல் மற்றும் வஜ்ஜிரம் தொழிற்சாலைகளின் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனிதப் பாதங்களைப் பணிவோடு வணங்கிக் கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு பகுதியில் அமைந்துள்ள 36 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பெர்டெக் என்ற பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உறுப்பினர்களாக உள்ளன. மேற்படி நிறுவனம் எதிர்மறை சவ்வூடு பரவல் மற்றும் பன்மடங்கு ஆவியாக்கும் கலனை நிறுவியுள்ளது; அது 31-7-2012 முதல் செயல்பாட்டில் உள்ளது. அதன் மூலமாக கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு பூஜ்ஜிய திரவ நிலையை அடைகிறது. எனவே, இந்தக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து தற்போது எந்தவிதமான கழிவுநீரும் சுத்திகரிப்புச் செய்யாமல் வெளியேற்றப்படுவதில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியத்தில் ஓடுகின்ற கொட்டாற்றில் தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளும், வஜ்ஜிரம் கம்பெனி கழிவுகளும் கலக்கின்றன. இந்தக் கழிவுநீர் ஆற்றில் கலப்பதால் நிலத்தடி நீர் உப்புத் தண்ணீராக மாறி, குடிப்பதற்கு இலாயக்கற்ற தண்ணீராக மாறியுள்ளது. எனவே, தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை, சுத்திகரிப்பு நிலையத்திலேயே தடுத்து நிறுத்தினால், அந்தப் பகுதி மக்களுக்குக் குடிக்க நல்ல தண்ணீர் கிடைக்கும். மேலும், ஓரளவுக்கு நல்ல தண்ணீர் வளம் உள்ள அந்தப் பகுதி விவசாயம் செய்வதற்கும் ஏற்புடையதாக இருக்கும். அவர்கள், சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து கழிவுநீரை சாதாரண நாட்களில் வெளியேற்றுவதில்லை. மழைக் காலங்களில்*

2014 ஜூலை 15]

மழை நீரோடு, மழை நீராக கழிவுநீரையும் கலந்து வெளியேற்றிவிடுகிறார்கள். அதனால், அந்தப் பகுதியிலுள்ள நீர் உப்பு நீராக மாறிவிடுகிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்து, கழிவுநீர் கலப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு பகுதியில் அமைந்துள்ள 36 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பெர்டெக் என்ற பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உறுப்பினர்களாக உள்ளன. இதுவரை, இந்தப் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரானது அருகிலிருக்கிற கால்வாய்கள் மூலமாக இதுவரை கொட்டாற்றில் வெளியேற்றப்பட்டு வந்திருக்கிறது. கழிவுநீரில் மொத்தம் கரைந்துள்ள திடப் பொருள்கள் மற்றும் குளோரைடு அளவு, வாரியம் நிர்ணயித்த அளவைக்காட்டிலும் அதிகமாக இருந்த காரணத்தால், வாரியத்தின் அறிவுறுத்தலின்பேரில், பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தற்போது எதிர்மறை சவ்வூடு பரவல் மற்றும் பன்மடங்கு ஆவியாக்கும் சுண்டுகலன்மூலம் பூஜ்ஜிய திரவ நிலையை அடைகிறது. அது 31-7-2012 முதல் செயல்பட்டு வருகிறது.

மேலும், பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து எந்தவிதமான கழிவுநீரும் வெளியேறாவண்ணம், அதன் முழு கொள்ளளவான நாளொன்றுக்கு 891 கிலோ லிட்டர் என்பதைக் குறைத்து நாளொன்றுக்கு 300 கிலோ லிட்டர் என்ற நிலையிலேயே இயங்குவதற்கு வாரியம் அனுமதி அளித்துள்ளது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: எனவே, இந்தக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து தற்போது எந்தவிதமான கழிவுநீரும் வெளியேற்றப்படுவதில்லை. சுத்திகரிக்கப்பட்ட

கழிவுநீர் தொழிற்சாலைகளால் மறு சுழற்சி செய்யப்பட்டு வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சமீபத்தில் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் கூட்டத்திலே கலந்து கொண்ட விவசாயிகள் சங்கத்தைச் சார்ந்தவர்கள், மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய இந்த நடவடிக்கையைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுச் சுத்திகரிப்பு நிலையங்கள், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் பட்ட, பட்டயப் படிப்பு படித்தவர்களுக்கு அரசின் மூலமாக வேலைவாய்ப்பு அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

148—

மாணவர் விடுதி

***4268—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—